**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2024 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 19 -ஆம் நாள், வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் புரட்டாசி மாதம் 03-ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.08/2024 ன் அ.வ.எண்.209/2015

V. ஜெயக்குமார் ... மனுதாரர் /வாதி

/எதிர்/

1) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவில்
வள்ளியூர், அதன் செயல் அலுவலர் மூலம்.

2) தமிழக அரசு, அதன் மாவட்ட ஆட்சியர் மூலம்
திருநெல்வேலி

3) தாசில்தார் அவர்கள், இராதாபுரம்.

4) ஆணையர், இந்து அறநிலைத்துறை,
சென்னை. ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 22.08.2024 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.S.ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசாங்க வாதுரைஞர் திரு.V.முத்துகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.19 17:10:24 +0530

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 13 விதி 9 ன்கீழ் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 13.08.2010 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை பெற்றுகொண்டு அசல் ஆவணத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கானது தற்போது கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. ஜவஹர் செல்வம் என்பவரால் 13.08.2010 ல் மனுதாரர் பெயருக்கு ஏற்பட்ட ஆவண எண்.3676/2010 ல் பதிவு செய்யப்பட்ட அசல் கிரைய ஆவணம் அசல் வழக்கில் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் மனுதாரர் தாக்கல் செய்த வழக்கையும் மனுதாரரின் மகனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கையும் ஒரே வழக்காக சேர்ந்தரணையாக நடத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பேரில் வாய்மொழி சட்சியம் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் அ.வ.எண்.209/2015 ல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு ஆவணங்களை அனைத்தும் அ.வ.எண்.209/2015 ல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் குடும்ப அவசியத்திற்காக பணம் தேவைப்படுவதால் அடமானம் வைப்பதற்காக அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.11 கிரைய ஆவணம் தேவைப்படுவதால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 13.08.2010 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை பெற்றுகொண்டு அசல் ஆவணத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.19 17:10:33 +0530

2. **1வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரரது மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கானது 2015 முதல் கடந்த 9 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. வழக்கு பகுதி விசாரிக்கப்பட்ட நிலையில், 14.09.2023 முதல் நிலுவையில் உள்ளது. வாதி ஏற்கனவே தன்னுயை விசாரணைக்கு பின் வ.ம.எண்.7/2024 ன் மூலம் 12 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் பற்றி வழக்குரையில் எந்தவிதமான எடுத்துரைப்பும் சொல்லப்படவில்லை. மேலும், வ.ம.எண்.8/2024 மனுவை அசல் ஆவணம் திரும்ப பெற தாக்கல் செய்துள்ளார். தபசில் சொத்தில் மனுதாரருக்கு உரிமை அனுபவம் எதுவும் கிடையாது. முருகன்கோவில் சொத்தை சட்ட விரோதமாக ஆவணங்கள் தயார் செய்து சொத்தை அபகரிக்க வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் ஆவணத்தை Ex.A11 அடமானம் வைக்கப்போவதாகவும், தபசில் சொத்தை வில்லங்கம் செய்யப்போவதாக மனுதாரர்/ வாதி குறிப்பிட்டுள்ளார். தபசில் சொத்து திருக்கோவில் சொத்தாகும். தபசில் சொத்தில் உரிமை இல்லாத நபர் வில்லங்கம் அடமானம், கிரையம் ஏற்படுத்தினால் திருக்கோவிலுக்கு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கு ஆவணங்களை அனைத்தும் அ.வ.எண்.209/2015 ல்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.19 17:10:43 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் குடும்ப அவசியத்திற்காக பணம் தேவைப்படுவதால் அடமானம் வைப்பதற்காக அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.11 கிரைய ஆவணம் தேவைப்படுவதால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 13.08.2010 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை பெற்றுகொண்டு அசல் ஆவணத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி ஏற்கனவே தன்னுயை விசாரணைக்கு பின் 12 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் பற்றி வழக்குரையில் எந்தவிதமான எடுத்துரைப்பும் சொல்லப்படவில்லை. மேலும், வழக்கு பகுதி விசாரிக்கப்பட்ட நிலையில் அசல் ஆவணத்தை திரும்ப வழங்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படத்தக்கது ஆகும்.

இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் வருடம் செப்டம்பர் மாதம் 19-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.19 17:10:52 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.09.19 17:10:58 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.08/2024 இன்

அ.வ.எண்.209/2015

தேதி.19.09.2024